DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.No.54/2025**
Prosecution Witness P.W.15

Name : **திரு.அமிர்தராஜ்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 17.03.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் தாராபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 17.11.2024 ஆம் தேதி அன்று சின்னமனூர் காவல் நிலையத்திலிருந்து வாகன எண் TN 78 E 5801 என்ற இருசக்கர வாகனம் சம்பந்தப்பட்ட விவரங்களை கேட்டிருந்தார்கள். மேற்கண்ட விபரங்களை நான் எங்கள் வாகன் கணினி பதிவில் இருந்து பார்த்து அது சம்பந்தப்பட்ட விபரங்களை படிவம் 24 சான்றிட்டு நான் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அந்த சான்றாவனம் தான் அ.த.சா.ஆ.34,

2. மேற்கண்ட வாகனம் ஹோண்டா இருசக்கர வாகனம் Dio Drum உரிமையாளர் பெயர் வண்டியின் உரிமையாளர் பெயர் கார்த்திக், த/பெ. முத்துக்கிருஷ்ணன், பெரியார் நகர், மூலனூர், தாராபுரம் இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். என்னிடம் காண்பிக்க கூடிய புகைப்படத்தில் உள்ளது அந்த இருசக்கர வாகனம் அது சா.பொ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் நான் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள விபரம் எனக்கு இன்று தான் தெரியும் என்றால் சரிதான். வழக்கின் பொருண்மை குறித்த விபரங்களை ஆய்வாளர் விசாரணையில் நான் ஏற்கனவே சொல்லவில்லை

என்றால் சரியல்ல. நான் வாகனத்தின் விவரங்களை ஆய்வாளரிடம் சொல்லி உள்ளேன். ஆய்வாளர் என்னை நேரடியாக வந்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

2. ஒரு ஒப்புதல் கடிதம் பெற்று தான் நான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பெற்றுக் கொண்டதாக சொல்லும் ஒப்புதல் கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணத்தை நான் நேரடியாக நீதிமன்றத்தில் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பியதாக சொல்லும் ஆவணம் சீல் வைத்து அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் போஸ்டல் கவர் வைத்து, சீல் வைத்து அனுப்பவில்லை என்றால் சரிதான்.

3. 2021–ம் ஆண்டு மேற்கண்ட வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. கார்த்திக், த/பெ. முத்துக்கிருஷ்ணன், பெரியார் நகர், மூலனூர், தாராபுரம் என்ற விலாசத்தில் இந்த வண்டி பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக காவலர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அறிக்கை கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் வழக்குக்காக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. அலுவலக ஆவணத்தை மற்றும் வழக்குக்காக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.17 16:01:03 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.